**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 14-03-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-03-14 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-03-15 | 2023-03-16 | 2023-03-17 | 2023-03-18 | 2023-03-19 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 35.0 | 34.0 | 34.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 23.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 20 | 30 | 30 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6.0 | 6.0 | 6.0 | 8.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 270 | 290 | 290 | 360 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 1 | 3 | 4 | 6 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

மார்ச் 16 முதல் 19 வரை இலேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34.0°C - 35.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 24.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் வாரத்தின் கடைசி இரண்டு நாடகளுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 06 - 08 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### பொது ஆலோசனை:

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் கோழிகளுக்கு வெப்ப அழற்சி ஏற்படுவதை தடுக்க கோழிப்பண்ணைகளில் இரு ஓரங்களிலும் நனைத்த சாக்கை கட்டி விட வேண்டும் .

### குறுஞ்செய்தி :

வறண்ட வானிலை, மிதமான காற்று வீசுவது மற்றும் காய்ந்த புட்கள் உள்ள சூல்நிலையில் வயல்வெளிகளில் பயிர் கழிவுகளையும், களைகளையும் "தீ" யிட்டு எரிப்பதை முற்றிலுமாக தவிர்க்கவும்.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| எள் | முளைத்த இறவை எள் பயிரில் மாங்கனீசு சல்பேட் குறைபாடு தென்படும். இதை நிவர்த்தி செய்ய ஒரு எக்டருக்கு 5 கிலோ மாங்கனீசு சல்பேட் உடன் 45 கிலோ மணல் கலந்து மாலை |

| | |
|---|---|
| | வேளையில் தூவி மறுநாள் காலையில் நீர் பாசனம் செய்யவும். |
| எள் | எள் வளரும் பருவம் அதிக வெப்பநிலை காரணமாக எள் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலில் நன்கு கண்காணித்து ஊடுருவி பாயும் பூச்சிக்கொல்லி பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். |
| மல்லிகை | மல்லிகையில் மொட்டுப்புழு பாதிக்கப்பட்ட பூக்கள் வெளிர் சிவப்பு நிறமாக மாறி, செடியிலிருந்து உதிர்ந்து விடும். ஒரு புழு தன் வாழ்நாளில் 2-3 மொட்டுகளைத் தாக்கும் புழுக்களை கட்டுப்படுத்த தயோகுலோர்பிரிட் 240 SC @ 1 மி.லி /லிட்டர் என்ற அளவில் தெளிக்க அறிவுறுத்தப்படுகிறது. |

**தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:**

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் மிளகாயில் முரனைச் சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை சிலந்தியின் தாக்குதலால் இலைகள் கீழ்நோக்கி சுருங்கியும், இலைக்காம்புகள் நீண்டும் காணப்படும். இதனால் செடிகளும்; வளர்ச்சி குன்றிவிடும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 12 ஊதா நிற ஒட்டும்பொறி அட்டை மற்றும் 12 மஞ்சள் வண்ண ஒட்டும்பொறி அட்டைகளை பயிரின் உயரத்திற்கேற்ப ஒரே குச்சியில் கட்டிவிடவும் மேலும் ஒரு ஏக்கருக்கு 25 கிலோ வேப்பம் பிண்ணாக்கு அல்லது வேப்பங்கொட்டை இவற்றுள் ஏதேனும் ஒன்றினை நன்கு இடித்து வயலில் இடவும். |
| கத்திரிக்காய் | காய்கறிப் பயிர்களுக்கு நுண்ணூட்ட உரமிடுதல் நல்ல பயனளிக்கும். பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை நீர் பாசனம் வழி விடுதல் அல்லது இலைவழியாக தெளிக்கவும். |
| தென்னை | பகல் நேர வெப்பநிலை உயர்ந்து காணப்படுவதால் தென்னையில் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும். பொறிகளை ஒரு ஏக்கருக்கு 5 அல்லது 6 இடங்களில் வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. |

**உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:**

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | மேற்கூறிய வானிலையில், வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளரக்கும் விவசாயிகள் ஆட்டு அம்மை அதிகமாக வரும் இடங்களில் பொது மேய்ச்சல் தரைக்கு ஆடுகளை ஓட்டிச் செல்லக்கூடாது. விவசாயிகள் கால்நடை மருத்துவ் வரை அணுகி தக்க ஆலோசனை பெற்று ஆட்டு அம்மைக்கான தடுப்பூசி மார்ச் மாதம் போட வேண்டும். |